மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

அசல் வழக்கு எண். 53/2019

DW1 – திரு.சுப்பிரமணியன் நாள். 09.10.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

குறுக்கு விசாரணை

1. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தந்தை வேலுவிற்கும், எனது தாயார் வள்ளிக்கும் வாரிசுகள் யார் யார் என்றால் முத்து, உடையார், பாப்பாத்தி, கண்ணன் மற்றும் நான் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். எனது தகப்பனார் வேலு 10 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்றால் 15 வருடங்களுக்கு முன்னர் இறந்தார். எனது தாயார் வள்ளி எப்பொழுது இறந்தார் என்றால் 5 வருடங்களுக்கு முன்னர் இறந்தார்.

2. 1ம் வாதியின் கணவர் செல்லதுரைக்கும், எனது சகோதரி முத்துவிற்கும் திருமணம் நடைபெற்று அவர்களுக்கு வாரிசுகளாக பாண்டி, தமிழ்ச்செல்வி மற்றும் வைரவசுந்தர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் வாதி பாண்டிக்கு, 3ம் வாதி தமிழ்ச்செல்விக்கு மற்றும் வைரவசுந்தருக்கு அவரது தாயார் முத்து இறந்தபோது என்ன வயதிருக்கும் என்றால் பாண்டிக்கு 4 வயது, தமிழ்ச்செல்விக்கு 2 வயது மற்றும் வைரவசுந்தர் 6 மாத குழந்தை. மேற்படி வயது விவரங்களை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்படி செல்லதுரை 1ம் வாதியை எப்பொழுது திருமணம் செய்தார் என்றால் 2007ம் வருடம் செய்தார்.

3. வாதிகள், நாங்கள் மற்றும் எங்களது பெற்றோர்களுடன் கூட்டுக்குடும்பாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்துக்கள் தொடர்பாக பாகம் கேட்டு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பியுள்ளனர். மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். மேற்படி பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. 1ம் வாதியை மேற்படி செல்லதுரை முத்துவின் குழந்தைகளை பாதுகாப்பதற்காகதான் 1ம் வாதியை திருமணம் செய்தார் என்றால் சரிதான். 1ம் வாதியை மேற்படி குழந்தைகளை பாதுகாப்பதற்காக வேண்டி திருமணம் செய்யப்பட்டதால் மேற்படி 1ம் வாதிக்கு சீதனமாக நகைகள் மற்றும் பொருட்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நகை மற்றும் பொருட்கள் கொடுத்தோம். மேற்படி சீர்வரிசைகள் எதுவும் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அல்லாமல் எனது பெயரில் தனிப்பட்ட சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது.

5. மேற்படி எனது தனிப்பட்ட சொத்துக்களை எப்பொழுது கிரையம் வாங்கினேன் என்றால் 1991ம் ஆண்டு வாங்கினேன். மேற்படி நான் எனது பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்துக்களை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் விவரங்களை வருவாய் துறை ஆவணங்களை பார்த்தால் உண்மை நிலை

தெரியவரும் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்துக்கள் தொடர்பாக வாய்மொழி பாகவிடுதலை செய்துவிட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றும், அதற்கான தேதி, மாதம், வருடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி பாப்பாத்தியின் மகனான பழனிக்கு 2017ம் ஆண்டு திருமணம் நடைபெற்று அவருக்கு குழந்தைகள் இருக்கிறது என்றால் சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை